Volume 6 Special Issue 1 November 2024 E-ISSN: 2582-2063

# தமிழர் பண்பாட்டில் மட்பாண்டங்களின் பயன்பாடு - ஓர் ஆய்வு

**முனைவர் பா. ஜெயா**
*உதவிபேராசிரியை, இந்தியப் பண்பாட்டுத்துறை*
*அருள்மிகு பழனியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி, பழனி*

## முன்னுரை

பண்டைகால மக்கள் அன்றாட வாழ்க்கையில் உணவுப் பொருட்களைச் சமைப்பதற்கும், உண்ணுவதற்கும், சேமித்து வைப்பதற்கும் மட்கலன்களையே அதிகம் பயன்படுத்தினர். நம்முன்னோர்களின் வாழ்க்கை முறையை ஊகிக்க உதவுபவை அவர்கள் பயன்படுத்தி விட்டுச்சென்ற பழம் பொருட்கள் ஆகும். பண்டையக்காலச் சமுதாயத்தினர் விட்டுச்சென்ற எச்சங்களில் இருந்து கடந்த கால வாழ்க்கை முறையை அறிந்துக்கொள்ள மண்பாண்டகங்களின் பயன்பாடு மிகவும் உதவியாக காணப்படுகின்றன. மட்பாண்டங்கள் பலகாலத்தில் பல வகையாக காணப்படுகின்றன. மட்பாண்டங்களின் முக்கியத்தும் பெருங்ககற்கால மட்பாண்டங்கள் இடைகற்கால மட்பாண்டங்கள் முழு கறுப்பு நிற மட்பாண்டங்கள் முழு சிவப்பு நிற மட்பாண்டங்கள் ஹரப்பா காலத்து மண்பானை வகைகள், தமிழகத்தில் மண்பானை வகைகள், தமிழக ஹரப்பா மக்கள் பயன்படுத்திய மண்பாண்டங்கள் எழுத்து பொறிக்கப்பட்ட மண்பானைகள், குறியீட்டுகள் பொறிக்கப்பட்ட மண்பானைகள் அயல்நாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட மண்பானைகள் ஆகியவைக் குறித்து ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

## மட்பாண்டங்களின் முக்கியத்துவம்

வேட்டையாடும் நிலையிலிருந்து ஓரிடத்தில் நிலையாகத் தங்கி விவசாயத்தில் ஈடுபட்ட மக்கள் தேவை நிறைவு அடிப்படையில் பலதரப்பட்ட மட்பாண்டங்கள் உருவாக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டன. மட்பாண்டங்களின் பயன்பாட்டை அடிப்படையாகக் கொண்டு பண்பாட்டு வளர்ச்சியை கணித்தனர் தெல்லியல் ஆய்வாளர்கள். மண்பானைகளின் அடிப்பாகம், அமைப்பு, வர்ணம் பூசப்பட்ட முறை, அவற்றில் உள்ள கோடுகள், மண்பாண்டங்களின் கைபிடிகள், வாய்ப்பகுதி, ஆகியவற்றின் வாயிலாக தொல்லியலாளர் அதன் தன்மையினை வேறுபடுத்தி காட்டுவர். களிமண்ணை பதப்படுத்துதல், வடிவம் கொடுத்தல், வெளிப்புற அலங்காரங்கள், இறுதியாக மண்பாண்டங்களை சுடும்முறை முதலியவை வாயிலாக தொல்லியல் ஆய்வாளர்கள் காலத்தை கணிக்கின்றனர்.

## பெருங்கற்கால மட்பாண்டங்கள்

மனித இனம் தோன்றி பல்லாயிரம் ஆண்டுகளுக்குப்பின் நெருப்பின் பயன்பாட்டை அறிந்து மண்பானைகளை உருவாக்கி அதில் சமைக்கத் தொடங்கினான். ஹரப்பா நாகரிகத்திற்கு முன்பிருந்தே மண்பானைகளின் பயனை அறிந்து இருந்தனர். பெருங்கற்காலத்தில் அம்மக்கள் பயன்படுத்திய மட்பாண்டங்கள் வண்ணம் பூசப்பட்டும், வண்ணக்கோடு இடப்பட்டும் இருந்தன. தொல்லியலாளர்கள் பெருங்கற்கால மட்பாண்டங்களில் நிறங்களின் அடிப்படையில் அவற்றின் காலத்தைக் கணித்து வகை பிரித்தனர். இதில் கருப்பு-சிவப்பு என்னும் வகை பெருங்கற்காலத்தில் மிகவும் சிறப்புடையதாக கருதப்பட்டன. பெருங்கற்காலத்தில் அகழ்வாய்வில் கிடைத்த பொருட்களை மூன்று வகையாக பிரித்தனர். அவைகள் மட்பாண்ட வண்ணப்பூச்சு, மட்பாண்டக்கீறல் வளைவுகள், வண்ண வரைவுக் கல்மணிகள். பெருங்கற்காலத்தில் அந்த மக்கள் பயன்படுத்திய மட்பாண்டங்கள் வண்ணம் பூசப்பட்டும், வண்ணக்கோடுகள் இடப்பட்டும் இருந்தன. தொல்லியலாளர்கள் பெருங்கற்கால மட்பாண்டங்களில் அமைந்த நிறங்களின் அடிப்படையில் அவற்றின் காலத்தைக் கணித்து வகைபிரித்தனர். இதில் சிகப்பு வகை பெருங்கற்காலத்தை சார்ந்தவையாகும். பெருங்கற்கால கீறல்களுடன் கூடிய மட்பாண்டங்கள் பூம்புகார், உறையூர், ஆதிச்ச நல்லூர்,

கொற்கை, அழகன்குளம் அரிக்கமேடு போன்ற இடங்களில் கிடைத்துள்ளன. கருப்பு சிவப்பு பானை ஓடுகள் ராஜஸ்தான், மஹாராஷ்டிரம், கங்கைச் சமவெளியிலிருந்து தென்னிந்தியா வரை பரவி உள்ளது.

**உருவம் பொறித்த பானைகளின் பயன்பாடு**

தமிழ்நாட்டில் அழகன்குளத்தில் கிடைத்த பானையோடுகளின் உட்புறத்தில் மீன், மயில், புறா மற்றும் குதிரை உருவங்கள் காணப்படுகின்றன. அரிக்கமேட்டில் நடந்த அகழ்வாய்வின்போது சுடுமண் கிண்ணங்கள் கிடைத்துள்ளன. இக்கிண்ணங்கள் சாம்பல் நிறமாகவும், கருப்பு நிறமாகவும், சாம்பல் கலந்த பழுப்பு நிறமாகவும் காணப்படுகின்றன. மட்கலத்தின் அடிப்பகுதியில் உட்புறமாக நடுவில் குமிழ் காணப்படுகின்றன. இதனைச் சுற்றி கோடுகள் வட்டமாக வரையப்பட்டுள்ளன. எனவே இவ்வுருவம் பதித்த பானையோடுகள் எல்லாம் பெருங்கற்காலத்தை சேர்ந்தவை என யூகிக்கப்படுகின்றன.

**ஹரப்பா காலத்து பானைவகைகள்**

ஹரப்பா அகழ்வாய்வின்போது பலவகையான மட்பானைகள் கிடைத்துள்ளன. அவற்றில் ரவி.ஃ.பேஸ் சமையல் பானை பெரிய உருண்டை வடிவங்களில் தயாரிக்கப்பட்டன. அவை உணவு நிரப்பப்பட்டால் அவை சாய்ந்துவிடமால் இருக்க குறைந்த ஈர்ப்பு மையத்தை கொண்டிருந்தன. பெரிய கோளப்பாத்திரத்தின் மேற்கில் தலையில் ஒரு சிறிய பானைகாணப்பட்டது. பெரிய ஜாடிகள் தரையில் அடிக்கி வைத்து பயன்படுத்தப்பட்டுள்ளன. தாமிரக்காலத்து மட்பாண்டங்களை கங்கை யமுனைச் சமவெளிகளிலும், இரும்புக் காலத்தில் தயாரிக்கப்பட்ட மட்கலன்கள் பளபளப்புடன் கறுப்பு நிறக்களிமண்ணால் செய்யப்பட்டவை ஆகும். மண்பாண்டங்கள் பற்றி தரவுகளை தொல்லியல் ஆய்வாளர்கள் பிரித்து காட்டினர். பாத்திரத்தின் அடிப்பாகம், அமைப்பு, வர்ணம் பூசப்பட்ட முறை, பாத்திரம் செய்த முறை, பாத்திரங்களில் காணப்பட்ட வளையங்கள், அவற்றில் உள்ள கோடுகள், கீறல்கள், முடிச்சு போன்றவைகள் வாயிலாக தொல்லியலாளர் வேறுபடுத்திக் காட்டுகின்றனர். பாத்திரத்தின் கைபிடிகள், வாய்ப்பகுதி போன்றவற்றின் வாயிலாக எக்காலத்தை சார்ந்தது என வரலாற்று ஆய்வாளர்கள் கணிக்கின்றனர்.

**முழுக்கருப்பு நிற மட்பாண்டங்கள்**

இக்கலன்கள் உட்புறம் மட்டுமின்றி வெளிப்புறமும் கருமையாக இருப்பதால் முழுக்கருப்பு மட்கலன்கள் என அழைக்கப்படுகின்றன. கருப்பு சிவப்பு நிற மட்கலன்கள் கிடைக்கும் மண் அடுக்குகளிலேயே காணப்படுவதால் இவை இரண்டும் உடன் காலத்தவை என்பது புலனாகும். இப்பாண்டங்களில் முழுக்கருப்பு நிறக் கலவை பூசப்படுவதாலும் றுளையில் நன்கு சுடப்படுவதாலும் முழுக்கருப்பு நிறம் பெற்று பளபளப்பாக உள்ளன. கொற்கை, காஞ்சிபுறம் அகழாய்வுகளில் கிடைத்துள்ள கருப்பு நிற மட்பாண்டத் துண்டுகள் சிலவற்றில் மட்டும் வெண்மை நிறம் தீட்டப்பட்டிருப்பமை புதுமையாகும். மக்கள் வாழ்ந்த பகுதிகளில் மட்டுமின்றி, சவக்குழிகளிலும் இவ்வகை மட்கலன்கள் பெருமளவில் கிடைத்துள்ளன.

**சிவப்பு நிற மட்கலன்கள்**

தமிழகத்தில் இவ்வகை மட்கலன்கள், பல வடிவங்களில் அதிக அளவில் கிடைத்துள்ளன. இவற்றுள் நேர்த்தியான வகைகளும் உண்டு, நேர்த்தியற்ற வகைகளும் உண்டு. புதிய கற்காலத்தில் உருவாக்கப்பட்ட இக்கலன்கள் கையினால் வனையப்பட்டு, முழுமையாக சுடப்படாமல் அரைவேக்காட்டுடன் திகழ்ந்தன. உலோகக் காலத்திற்குப் பின்னர் இவை குயவரது சக்கரத்தின் உதவியால் உருவாக்கப்பட்டன. இவற்றின் வடிவமைப்பு காலத்திற்கேற்ப பண்பாட்டிற்கேற்ப, தேவைக்கேற்ப பல வடிவங்களில் வனையப்பட்டன. அவற்றுள் நேர்த்தியற்ற மட்பாண்டங்கள், சிகப்பு நிற சாயம் பூசப்பட்ட மட்கலன்கள் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. துளையிடப்பட்ட சிவப்பு நிற

மட்பாண்டங்கள் சிலவற்றில் ஒப்பனை மிகுந்துள்ளன. அடுத்துக்காட்டாக கோடுகளாலான ஒப்பனை, நகம் திக்கப்பட்டது போன்ற கீறல்கள் பொண்ட ஒப்பனை, பூ வேலைப்பாடு ஆகியவற்றைக் குறிப்பிடலாம். சிவப்பு நிற மட்பாண்டங்கள் சமையலுக்கும் மற்றும் பலவிதமான அன்றாட உபயோகத்திற்கும் பயன்படுத்தப்படுவதால் இவற்றில் சாயங்கள் பூசப்படுவதில்லை. இருப்பினும் வண்ணம் பூசப்பட்ட பானை வகைகள் சில பையம்பள்ளி, தக்களக்கோட்டை, சங்கனகல்லு அகழாய்வுகளில் கிடைத்துள்ளன.

**காவிக்கலவை பூசப்பட்ட மட்பாண்டங்கள்**

காவிக்கலவை பூசப்பட்ட மட்பாண்டங்களை முதலில் திரு ஜெ.பாபிங்க்டன் என்பவர் 1819-ல் கண்டுபிடித்தார். இவ்வகை மட்பாண்டத்தில் காவிகலவை வெளிபுறத்திலேயே பூசப்பட்டிருக்கும் சிலவற்றில் காவிக்கலவையின் மீது வெள்ளை அல்லது மஞ்சள் நிற வண்ணங்களும் பூசப்பட்டுள்ளன. இவ்வண்ணங்களீ பல கொடுகள், வளைவுகள், புள்ளிகள், வட்டங்கள் ஆகியன போடப்பட்டுள்ளன. கருப்பு சிவப்பு மட்பாண்டங்களம் காவிக்கலவை பூசப்பட்டிருக்கலாம் என்பது ஆய்வாளர்களுன் கருத்து.

**கருப்பு சிகப்புப் பானை ஒடுகள்**

களிமண்ணால் செய்யப்பட்ட இம்மட்பாண்டங்களைச் சூளையில் கவிழ்ந்து வைத்துச் சுடுவர். அப்போது காற்று புகாத உட்பகுதியும், வாய்ப்பகுதியும் கருப்பு நிறமாகவும், அனலும் காற்றும் படும் வெளிப்பகுதி முழுவதும் சிவப்புநிறமாகவும் மாறிவிடுகின்றன. இது ஒரு ரசாயன மாற்றம். இதன் வெளிப்புறத்தில் உப்பு கலந்த நீரைக் கொண்டு மெருகிடும் முறையால் இதில் மினுமினுப்பு (பளபளப்பு) ஏற்படுகிறது. தென்னிந்தியாவிலும் தக்கானத்திலும் கி.மு. 300 - கி.மு. 100 வரை கணிக்கத்தக்க படிவுகளில் இப்பானையோடுகள் கிடைத்துள்ளன. ஆனால் வட இந்தியப் பகுதிகளின் சில இடங்களில் இவை கி.மு.1500-க்கு முன்பு கணிக்கக்கூடிய செப்புப் பண்பாடுக் காலத்தில் கிடைத்துள்ளன.

**தமிழகத்தில் மட்பாண்டங்கள்**

தமிழகத்தில் பல வகையான பானைகள் மக்கள் பயன்பாட்டில் இருந்துள்ளன. அவை நௌலட்டட்பானைகள், அரட்டின் வகைகள், ஆம்போரா சாடிகள் போன்றவைகள் கண்டறியப்பட்டுள்ளன. தமிழகத்தில் கிடைக்கும் களிமண்ணை நீரடன் நன்கு கரைத்து மெல்லிய துணியில் வடிகட்டி பின்னர் அக்குழம்பினை வெய்யிலில் காயவைப்பார்கள். அக்குழம்பினை துணியின் வழியாக ஊற்றி வடித்து நிழலில் காயவைத்து மாவு போன்ற கெட்டியான பக்குவத்தில் பிசைந்து அக்களிமண்ணை சக்கரத்தில் வைத்து மட்கலன்கள் செய்தனர். பின்னர் அக்கலன்களுக்கு உட்புறமாக கருப்பு தீட்டினர். தட்டுவடிவிலான மட்பாண்டத்தில் உட்பகுதியில் மூன்று முதல் ஏழு வட்டங்களாக சிறுசிறு புள்ளிகள் குத்தி அலங்காரம் செய்யப்பட்டது. இத்தகைய அலங்காரத்திற்கு ரௌலட்டட் அலங்காரம் என்று பெயர். குறுகிய கழுத்துப் பகுதியும், தோளில் இரண்டு கைப்பிடிகளும் அகன்ற உடன் பகுதியும் கூர்மையான அடிப்பகுதியும் கொண்ட அழகிய சாடிகளில் ரோமானியர் மதுவை தமிழ்நாட்டுக்கு கொண்டு வந்தனர். மது வகைகளை இறக்குமதி செய்ய "ஆம்போரா" சாடிகள் பயன்படுத்தப்பட்டன என்பதனை அகழ்வாய்வின் வாயிலாக அறிய முடிகிறது.

**முடிவுரை**

தமிழனின் வாழ்க்கையில் அவர் பயன்படுத்திய மண்கலன்களின் பயன்பாடு மிகவும் மக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். கற்கால மனிதன் முதல் தற்கால மனிதன் வரை மனிதன் எவ்வாறு வாழ்ந்தான் என்பதைக் குறிப்பதில் பானைகள் முக்கிய பங்குவகிக்கின்றன. ஹரப்பா, மொகஞ்சதாரோ, அரிக்கமேடு, அதிச்சநல்லூர் போன்ற இடங்களில் கிடைத்த பானை ஒடுகள்

எக்காலத்தை சார்ந்தது என்றும், எந்த வகையை சார்ந்தது என்றும் பிரித்து ஆராயப்பட்டு அக்கால மக்கள் பயன்படுத்திய மண்பாண்டங்களை தற்கால மக்கள் பயன்படுத்தி பயன்பெறுவோம், நோய் இல்லாத வாழ்வை வாழ்வோமாக.

**மேற்கோள்கள்**


1. *தொல்லியல் ஆய்வுகள்*, 2014.
2. *தமிழ்நாடு தொல்லியல்*, 2008.